செ.வெ.எண் : 04/ ஜூலை நாள் : 03.07.2021

# இராமநாதபுரம் மாவட்டம்

## 2021-22 நிதி ஆண்டிற்கு ரூ.5405.49 கோடி மதிப்பில் கடனுதவிகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## கடன் திட்ட அறிக்கையை வெளியிட்டு மாவட்டஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப.,அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 02.07.2021 அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப.,அவர்கள், மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பாக அனைத்து வங்கிகள் ஒருங்கிணைப்பு குழுவின் நடப்பு நிதி ஆண்டிற்கான கடன் திட்ட அறிக்கையை வெளியிட்டார்.

அதன்பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, நபார்டு வங்கி மற்றும் மாவட்ட அனைத்து வங்கிகள் ஒருங்கிணைப்பு குழு சார்பில் நடப்பு நிதி ஆண்டிற்கான கடன் திட்ட அறிக்கையை தயாரித்துள்ளது. அதன்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு நிதி ஆண்டிற்கு (2021-22) ரூ.5405.49 கோடி வங்கிகள் கடனாக வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ.4815.30 கோடி ரூபாயை விட 9.28 சதவிதம் அதிகமாகும்.

குறிப்பாக, வேளாண் துறைக்கு மட்டும் ரூ.3399.84 கோடி கடன் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இந்த தொகையானது கடந்த ஆண்டு இலக்கை விட 10.50 சதவிதம் கூடுதலாகும். மேலும் சிறு,குறு, நடுத்தர தொழில் துறைக்கு ரூ.193.11, வீட்டுக்கடன் ரூ.344.00 கோடி, கல்விக்கடன் ரூ.304.00 கோடி, ஏற்றுமதி தொழில்கள் சார்ந்த துறைக்கு ரூ.38.00 கோடி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைக்கு ரூ.22.42 கோடி, சமூக உள்கட்டமைப்புக்கு ரூ.52.37 கோடி, இதர கடன்களுக்கு ரூ.352.00 கோடி என மொத்தம் 5405.49 கோடி ரூபாய்க்கு கடன் திட்ட அறிக்கையானது தயார் செய்யப்பட்டு வங்கிகளுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப.,அவர்கள் கடன் திட்ட அறிக்கையை வெளியிட இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தூத்துக்குடி மண்டல , முதுநிலை மண்டல மேலாளர் திரு.ஜி. ஸ்ரீராம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.கார்த்திகேயன், நபார்டு வங்கி-மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு.அருண்குமார் , ஐ ஓ பி - ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன இயக்குனர் திரு.கலைச்செல்வன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்திமக்கள் தொடர்புஅலுவலகம், இராமநாதபுரம்**